திரு. சி. வி. ராஜகோபால் : தலைவர் அவர்களே, லாட்டரி சீட்டுகள் அதிகமாக வாங்கி வாங்கி அதில் அதிர்ஷ்டம் அளிக்காத காரணத்தால், பல குடும்பங்கள் கெட்டுப் போயிருக்கின்றனவே, அவர்களுக்கு அந்த அந்தத் தொகையைப் பகிர்ந்தளிக்க அரசாங்கம் உத்தேசிக்குமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: மாண்புமிகு உறுப்பினர் ஒரு சீட்டு வைத்துக் கொண்டிருப்பதை நான் பார்த்தேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : இதனால் பாதிக்கப்படுவ தில்லை. லாட்டரி சீட்டு வாங்குவதால் பாதிக்கப்பட்டதாகத் தகவல் இல்லை. குதிரைப் பந்தயத்தால் ஒரு சிலர் பாதிக்கப்பட்டதாகச் சில தகவல்கள் உண்டு.

திரு. எம். அய்யாசாமி : இந்தமாதிரி பரிசுத் தொகையை வாங் காதவர்கள் எப்போது அவற்றைக் கண்டு பிடித்துக் கொண்டு வந்து கேட்டாலும், அந்தத் தொகை கொடுக்கப்படுமா ? அதற்குக் கால வரை யறை உண்டா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : மூன்று மாத கால வரையறை உண்டு.

Appointment of Village Munsiff and Karnams.

***55** *Q.*—**Thiru V. ISVARMURTI** : **Will the Hon. the Minister for Finance be pleased to state the rules, if any, relating to the appointment of Village Munsiff and Karnams ?**

கிராம முன்சீப் கர்ணம் ஆகியோரை நியமிப்பதற்கான விதிகள்.

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி : மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்கு பதிலளிக்க வேண்டுகிறேன் :

கிராம முன்சீப், கர்ணம் ஆகியோரை நியமிப்பதற்கான விதிகள் ஏதேனுமிருப்பின் அவை யாவை ?

The Hon. Thiru K. A. MATHIALAGAN : At present the appointments of Village Munsiff and Karnam are governed by the Board's Standing Orders. Consequent on the repeal of the Hereditary Acts, the Government have proposed to formulate a new service scheme for the village officers.

திரு. ஜி. சுவாமிநாதன் : கிராம கர்ணம், முன்சீப், போன்றவர்களைத் தற்காலிகமாக நியமிக்கும் போது, கோட்டாட்சித் தலைவர்கள் ஓரளவுக்கு மனம் போன போக்கில் நியமிப்பதாகத் தெரிகிறது. எனக்குத் தெரிந்த வரையில், ஒரு சில இடங்களில் தகுதி உள்ளவர்கள் வந்திருக்கும்போது, தகுதி இல்லாதவர்களுக்குத் தற்காலிகமாகக் கொடுத்திருக்கிறார்கள். இது பற்றி டி. ஆர். ஓ.வுக்குத் தெரிவித்தபோது, அதன் மேல் அதிகாரம் தனக்கு இல்லை என்று அவர் தெரிவித்திருக்கிறார். அதைப் பார்க்கும் போது, தற்காலிக நியமனங்களுக்கு மேல் அதிகாரம் டி. ஆர். ஓ.வுக்குக் கொடுக்க அரசாங்கம் முன் வருமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : இந்தச் சட்டத்தில் எல்லாம் ரத்தாகிவிட்டது. புதிய முறைப்படி கிராம உத்தியோகஸ்தர்கள் நியமனம் பற்றிய விதிமுறைகள் தயாராகின்றன. அவை பரிசீலனையில் இருக் கின்றன. அதற்கிடையில் பழைய ஸ்டாண்டிங் ஆர்டர் படி நியமனம் செய்கிறோம். புதிய விதி முறையின் படி, இனிமேல் கிராம உத்தியோ கஸ்தர் நியமிக்கப்படுவார். அப்போது இதைக் குறிப்பில் எடுத்துக்கொண் டால், தக்க நடவடிக்கை எடுக்கலாம்.

24th January 1970

THIRU V. K. RAMASWAMY MUDALIAR : When appointments are made, will the Government insist upon these Karnams and Village Officers passing the test ?

THE HON. THIRU K. A. MATHIALAGAN : Certainly, we have to insist on certain qualifications.

திரு. ஜி. சுவாமிநாதன் : நான் குறிப்பிடுவது, இப்போதுள்ள விதி முறைப்படி அவர்கள் "டெஸ்ட்" பாஸ் செய்திருக்க வேண்டும். கிராமத்தில் உள்ளவர்களாகவும் சொத்துள்ளவர்களாகவும் இருக்க வேண்டுமென்று இப்போதைய விதிமுறை இருக்கிறது. மூன்று, நான்கு பேர்கள் வேலைக்குப் போகும்போது, அவர்களில் தகுதி உள்ளவர்களை விட்டு தகுதியில்லாதவர்களை கோட்டாட்சித் தலைவர் போடுகிறார். டி. ஆர். ஓ.வுக்கு எழுதிக்கேட்கும்போது, தனக்கு மேல் அதிகாரம் இல்லை என்று சொல்கிறார்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: டி.ஆர்.ஓ.வுக்கு அப்பீல் செய்யலாம். அதற்கு மேல் "போர்டு" இருக்கிறது. அதற்கு மேல் அரசாங்கத்திற்கும் அப்பீல் செய்யலாம். புதிய விதி முறைகள் அமுல்படுத்தப்படும்போது, அவற்றை மன்றத்தின் முன்னால் வைக்கிறோம்.

திரு. கே. ராஜாராம் : ஏற்கனவே இம்மாதிரி விஷயங்களில் டி. ஆர். ஓ. அப்பீல் இருக்கிறது. டி.ஆர்.ஓ. முடிவில் திருப்தி இல்லாவிட்டால் போர்டுக்கு அப்பீல் செய்யலாம். அதற்குமேல் கவர்ன்மெண்டுக்கு அப்பீல் செய்யலாம். எனக்குத் தெரிந்த வரை பல அப்பீல்கள் இது போல செய்யப்பட்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

MR. CHAIRMAN : Questions are over.

[*Note.*—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

II. ADJOURNMENT MOTION *re* ASSAULT AND ARREST OF HARIJANS ALONE BY THE POLICE AT KACHARAPALAYAM VILLAGE, KALLAKURICHI TALUK OF SOUTH ARCOT, CONSEQUENT ON SCUFFLE BETWEEN HARIJANS AND CASTE HINDUS.

MR. CHAIRMAN : I have received notice of a motion under rule 43 of the Council Rules given by Thiru M. Ethirajulu and Thiru A. Ponnappa Naidu, M.L.Cs. for the adjournment of the business of the House to discuss a definite matter of urgent public importance, namely, the assault and arrest of Harijans alone by the Police at Kacharapalayam village, Kallakurichi taluk in South Arcot district, consequent on the scuffle between the Harijans and Caste Hindus on 16th January 1970.

I think the Chief Minister is going to clarify the position.

திரு. எம். எத்திராஜுலு : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்
4-40 p.m. களே, தென்னார்க்காடு ஜில்லா, கள்ளக்குரிச்சி தாலுக்கா, கச்சிராபாளையம் கிராமத்தில் ஹரிஜனங்களுக்கும் ஜாதி இந்துக்களுக்கும் 16-1-1970-ல் ஏற்பட்ட கலவரத்தில் 33 வீடுகள் கொளுத்தப்பட்டு, சிலர் உயிரிழந்திருக்கின்றனர். இதன் சார்பில் போலீசார் ஒருதலைபட்சமாக ஹரிஜனங்களை அடித்து இம்சித்து காரணமின்றி கைது செய்து வருகிறார்கள். மேலும், அங்கு பதட்ட நிலையும், அமைதியின்மையும் ஏற்பட்டிருப்பதனால், இந்த சபையின் நடவடிக்கையை ஒத்திவைத்து, மிக முக்கியமான இந்தப் பிரச்னையைப் பற்றி விவாதிக்க வேண்டுமென்று இத் தீர்மானத்தின் மூலம் கேட்டுக்கொள்ளுகிறோம்.